

மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிய

# திருவாசகத் தொகுப்பும் ஈழத்துச்சிதம்பர வரலாற்றுச் சுருக்கமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



முந்தை மாலொடு முண்டகன் கண்டிலா
அந்த ணாளன் சிற்றம்பலத் தாடுவான்
வந்து திண்ண வளம்பதி மேவிய
சுந்த ரேசனின் றூரவடி சூடுவாம்.

**சமர்ப்பணம்**
**அமரர் பேரறிஞர் ந. சபாரத்தினம்**
**அவர்களுக்கு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# திருவாசகத் தொகுப்பும் ஈழத்துச் சிதம்பர வரலாற்றுச் சுருக்கமும்

தொகுப்பாசிரியர்:

தி. விசுவலிங்கம் B.Sc

தலைவர், திருவள்ளுவர் கல்விக் கழகம்

பாரதி பதிப்பகம்

வெளியிடுவோர்:

திரு. பொன்னம்பலம் குழந்தைவேலு

கே. கே. எலக்ரோனிக்ஸ் நிறுவனம்

டாக்டர் ஆதி கணபதி சோமசுந்தரம்

ஸ்காபரோ பல் வைத்திய நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு: 1000 பிரதிகள்
2025 திருவள்ளுவராண்டு
பவ மார்கழி 1994

உரிமை: ஆசிரியருக்கு

அச்சமைப்பு: பாரதி பதிப்பகம்
905-566-4822

அட்டை அமைப்பு: திரு. பா. ஞானபண்டிதன்
416-588-7193

அச்சுப்பதிவு: எக்ஸ்பிரஸ் பிரிண்ரிங்
(905) 764-0569

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

மாணிக்கவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்தை திருவாதிரைத் திருவிழாக்காலங்களில் தினமும் ஓதி ஆனந்த நடராசப் பெருமானின் பேரருளை சைவமக்கள் வேண்டி நிற்பர். அவர் பாடியருளிய தேனினும் இனிய திருவாசகத்திலிருந்து சில பகுதிகளைத் தொகுத்துள்ளேன். வருமாண்டில் திருவாசகம் முழுவதையும் வெளியிடவும் மாணிக்கவாசகப் பெருமானுக்கு விழா எடுக்கவும் முயல்வோம்.

ஈழத்துச் சிதம்பரத்தில் திருநடம்புரிகின்ற நடராசப் பெருமானைப் போற்றி வணங்குகையில் உள்ளத்தில் உவகையும் பக்தியும் பொங்குகிறது, மெய்சிலிர்க்கிறது. இங்கே முழங்கும் கோயில் மணியோசை இதயத்தைச் சிவலோகமாக்குகிறது. மூன்று வீதிகளிலும் நடைபோடுகையில் புண்ணிய தலத்தில் நடக்கும் புழகாங்கிதம் பெறுகின்றோம். என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே என்கிறது உள்ளம். திருமுறை ஓசை கேட்கும்போது 'நால்வர் நினைவுகளில் அகமகிழ்வோம்'. திருவாதிரை அபிடேகம் ஆடவல்லானின் 'ஞானக்குளியல்' காட்டி, அவனது 'பொன்னார் திருமேனி' ஆருத்திரா தரிசனத்தைக் காட்டும். அப்பொழுதல்லவோ மனிதப்பிறவியின் பயனை அனுபவிக்கின்றோம். இத்திருத்தலத்தின் வரலாற்றினைச் சுருக்கமாக எழுதியுள்ளேன்.

பேரறிஞர் நமசிவாயம் சபாரத்தினம் அவர்கள் அமரராகி ஈராண்டுகள் கடந்துவிட்டன. அவர் யாழ் இந்துக்கல்லூரியின் புகழ்பெற்ற அதிபராகவும், ஈழநாடு பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தலைவராகவும், காரைநகர் மணிவாசகர் சபையின் தலைவராகவும் விளங்கியவர். அவர் பிறந்த ஊராகிய காரைநகரிலுள்ள சிவன்கோவிலுடன்– ஈழத்துச் சிதம்பரத்துடன் மிகுந்த ஈடுபாடும் பக்தியும் உடையவர் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெறும் மாணிக்கவாசகர் விழாக்களில் அவர் ஆற்றும் திருவாசகப் பேருரைகள் சிந்தனைக்கு விருந்தானவை, செவிக்கு இனியவை. அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சித்தாந்தத்தில் ஆழ்ந்த அறிவும் புலமையும் நிரம்பியவர். இத்தொகுப்பினை அவருக்குச் சமர்ப்பணம் செய்து வெளியிடுகிறோம்.

இத்தொகுப்பினை என்னுடன் சேர்ந்து வெளியிட அன்பர் குழந்தைவேலு அவர்களும் டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம் அவர்களும் முன்வந்து உதவியுள்ளனர்.

அன்பர் குழந்தைவேலு அவர்கள் **கே.கே. எலக்ரோனிக்ஸ்** நிறுவனத்தின் உரிமையாளர். அன்னார் 1980–85 வரை சிங்கப்பூரில் 'வீடியோ' படத் தயாரிப்புத் துறையில் அனுபவம் பெற்று 1985ல் காரைநகரில் இந்நிறுவனத்தை நிறுவி அதன் கன்னிப்படைப்பாக 1986இல் ஈழத்துச் சிதம்பரத்தில் பத்துநாட்கள் நடைபெற்ற திருவெம்பாவைத் திருவிழாக்களைச்(பத்து நாட்கள்) சிறப்பாகத் தொகுத்துள்ளார். இதில் திருவிழா நிகழ்ச்சிகள், தேர்கள் திருப்பவனி வரும் காட்சி, மேளக்கச்சேரிகள், காவடி ஆட்டங்கள் யாவும் சிறப்பாக அமைந்துள்ளன. அவருடன் தொடர்பு கொண்டு அதன் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம். 1990 இலிருந்து கே.கே. எலக்ரோனிக்ஸ் நிறுவனம் கனடாவில் வீடியோ படத்தயாரிப்பில் பிரபல்யம் பெற்று விளங்குகிறது. இந்நிறுவனம் மேன்மேலும் சிறந்து விளங்க நடராசப்பெருமான் திருவருள் பாலிக்க வேண்டுகின்றேன்.

அன்பர் டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம் அவர்கள் பல்வைத்தியத் துறையில் மிகப் பிரபல்யம் பெற்றுவருபவர். ஈழத்துச் சிதம்பரத்தில் ஈடுபாடும் பக்தியுமுடைய பேரன்பர். அவரின் ஸ்காபரோ பல் வைத்திய நிலையம் மேன்மேலும் சிறப்பாக மக்கள் சேவை செய்திட நடசாசப்பெருமான் திருவருள் பாலிக்க வேண்டுகின்றேன்.

மெய்யன்பர்கள் இத்தொகுப்பினைப் பெற்று திரு வாசகத் தேனைப்பருகி நடராசப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்ய இறைவன் திருவருளை இறைஞ்சுகின்றேன்.

திருவள்ளுவரகம் — தி. விசுவலிங்கம்
01–12–1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகச் சிறப்பு

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – யெல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னுந் தேன்

## சிவபுராணம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க

ஈசனடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிப்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞாம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கு நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்றமறை யோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்நிறங்கள் ஓர்
ஐந்துடையாய் விணணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங் கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற்சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எங்காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போற்றித் திருவகல்

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடுமால் அன்று
அடிமுடி அறியும் ஆதரவதனில்
கடுமுரண் ஏன மாகிமுன் கலந்து
ஏழ்தல முருவ இடந்துபின் னெய்த்து
ஊழி முதல்வ சயசய என்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கடல் உலகினில்

யானை முதலா எறும்பீ றாய
ஊனமில் யோனியில் உள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களில் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களில் ஊறலர் பிழைத்தும்

ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படுந்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்
ஆண்டுகள் தோறும் அடைந்த அக்காலை
ஈண்டியும் இருத்தியும் எனைப் பல பிழைத்தும்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்

ஒருங்கிய சாயல் நெருங்கிஉள் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன் பணைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்திடை வருந்த எழுந்து புடைபரந்து
ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தம்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்
பித்த உலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக்களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்தும்
செல்வமென்னும் அல்லலிற் பிழைத்தும்
நல்குரவென்னுந் தொல்விடம் பிழைத்தும்

புல்வரம் பாய பலதுறை பிழைத்தும்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறுகோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின
ஆத்த மானா ரயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி அழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாகவே தியரும்

சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களில்
அமைவதாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாதம் என்னும்
சண்ட மாருதம் சுழித்தடித் தாஅர்த்து
உலோகா யதனெனும் ஒண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிடம் எய்தி
அதிற்பெரு மாயை யெனைப்பல சூழவும்
தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போல

தொழுதுளம் உருகி அழுதுடல் கம்பித்து
ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்
கொடிறும் பேதையும் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் இடையறா அன்பிற்
பசுமரத் தாணி அறைந்தாற் போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பேய் என்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுதலின்றிச்

சதுரிழந் தறிமால் கொண்டு சாருங்
கதியது பரமா அதிசய மாகக்
கற்றா மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வம் கனவிலு நினையாது
அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி அருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின் ஆகி முனியா தத்திசை
என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி

அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புல னொன்றி நாதவென் றரற்றி
உரைதடு மாறி உரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதய
மலரக்கண்களி கூர நுண்துளி அரும்பச்
சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதியன் ஆகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை அரசே போற்றி

கூடல் இலங்கு குருமணி போற்றி
தென் தில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின்னார் உருவ விகிர்தா போற்றி
கன்னார் உரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவா என்றனக் கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈசபோற்றி இறைவ போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி
அரைசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி

கடையேன் அடிமை கண்டாய் போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி
வானோர்க் கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய இறைவா போற்றி
மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழா மேயரு ளரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி

வாழ்வே போற்றிஎன் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி
உரையுணர் விறந்த ஒருவ போற்றி
விரிகடல் உலகின் விளைவே போற்றி
அருமையில் எளிய அழகே போற்றி
கருமுகில் ஆகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருண் மலையே போற்றி
என்னையும் ஒருவன் ஆக்கி இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி

தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி
முழுவது மிறந்த முதல்வா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானேர் நோக்கி மணாளா போற்றி
வானகத் தமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி

வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவர் உள்ளத் தமுதே போற்றி
கனவிலும் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலும் நாயேற் கருளினை போற்றி
இடைமரு துறையும் எந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணா மலையெம் அண்ணா போற்றி
கண்ணார் அமுதக் கடலே போற்றி

ஏகம் பத்துறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி
குற்றா லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி

அடைந்தவர்க் கருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழ்இரு மூவர்க்கு
அத்திக் கருளிய அரசே போற்றி
தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி
ஏனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள்கெட அருளும் இறைவா போற்றி
தளர்ந்தேன் அடியேன் தமியேன் போற்றி

களங்கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சேல் என்றிங் கருளாய் போற்றி
நஞ்சே யமுதாய் நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி

உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சேர் அடியாள் பற்கா போற்றி
அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி
இலங்கு சுடரெம் ஈசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னா போற்றி
கலையார் அரிகே சரியாய் போற்றி

திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி
தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளா னவர்கட் கன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
பேராயிர முடைப் பெம்மான் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளி அறுகின தாராய் போற்றி
நீளொளி ஆகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி
எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
அலைகடன் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி

படியுறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடுஈ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமல்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி
ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி
செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்தசொன் மாலை கொண்டருள் போற்றி

புரம்பல எரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம் பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய். 2

முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓல மிடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய். 6

அன்னே யிவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை யென்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய். 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோர் எம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ யாட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய். 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை தன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்
தான் பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 17

அண்ணாமலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளி யெழுச்சி

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோஞ்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல் சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 1

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாந்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 5

பப்பற வீட்டிருந் துணரும்நின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளும் ஆறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் னடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தணன் ஆவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 9

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் னலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்

## கோயில் மூத்த திருப்பதிகம்

உடையா ளுன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் னடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கு மரு
ளைப்புரி யாப்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.

## திருத்தசாங்கம்

ஏரார் இளங்கிளியே எங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமந் தேர்ந்துரையாய்–ஆரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான் செப்புவபோல்
எம்பெருமான் தேவர்பிரான் என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சதகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
　　உன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
　　ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி
　　சயசய போற்றி யென்னும்
கைதான் நெகிழவி டேன்உடை
　　யாய்என்னைக் கண்டுகொள்ளே.

## நீத்தல் விண்ணப்பம்

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேனெம்பி ரானென்னைத் தாங்கிக்
கொள்ளே.

## திருக்கோத்தும்பி

பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செவ்வியம் நாரணனும் நான்மறையும்
மாவேறு சோதியம் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பி.

## திருத்தெள்ளேணம்

திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரந்
திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குயிற்பத்து

கீதம் இனிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவிற் பாதாளம் ஏழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற தொன்மை
ஆதிகுணம் ஒன்றும் இல்லான் அந்தமி லான்வரக் கூவாய்.

இன்பந் தருவன் குயிலே ஏழுலகும் முழுதாளி
அன்பன் அமுதளித் தூறும் ஆனந்தன் வான்வந்த தேவன்
நன்பொன் மணிச்சுவ டொத்த நற்பரி மேல்வரு வானைக்
கொம்பின் மிழற்றுங் குயிலே கோகழி நாதனைக் கூவாய்.

## வாழாப்பத்து

பாரொடு விண்ணாய்ப் பரந்தளம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

## அருட்பத்து

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமால் அறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழைத்த பத்து

வேண்டத் தக்க தறிவோய்நீ
        வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
        வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
        யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
        அதுவும் உன்றன் விருப்பன்றே.

## பிடித்த பத்து

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
        அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
        புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையேஆய சிவபதம் அளித்த
        செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
        எங்கெழுந் தருளுவ தினியே.

பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்
        பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
        உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
        செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
        எங்கெழுந் தருளுவ தினியே.

## திருச்சாழல்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயான் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினுங்
காயில் உலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ.

## திருப்பொற்சுண்ணம்

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்ப மாயினார்க்குப்
பாதியு மாய்முற்று மாயினார்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினாருக்கு
ஆதியு மந்தமு மாயினாருக்
காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

## திருப்படையாட்சி

கண்களிரண்டும் அவன்கழல் கண்டு
களிப்பன ஆகாதே
காரிகையார்கள்தம் வாழ்விலென் வாழ்வு
கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு
மறந்திடும் ஆகாதே
மாலறியாமலர்ப் பாதம் இரண்டும்
வணங்குதும் ஆகாதே
பண்களிகூர்தரு பாடலோ டாடல்
பயின்றிடும் ஆகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள்
பாடுதும் ஆகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து
வெளிப்படும் ஆகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து
வெளிப்படும் ஆயிடிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்புதப் பத்து

மாடுஞ் சுற்றமு மற்றுள போகமும் மங்கையர் தம்மோடுங்
கூடி யங்குள குணங்களால் ஏறுண்டு குலாவியே திரிவேனை
வீடு தந்தென்றன் வெந்தொழில் வீட்டிட மென்மலர்க் கழல்
காட்டி
ஆடு வித்தென தகம்புகுந் தாண்டதோர் அற்புதம் அறியேனே

## செத்திலாப்பத்து

பொய்யனேன் அகம்நெகப் புகுந்தமு தூறும்
புதும லர்க்கழல் இணையடி பிரிந்துங்
கையனேன் இன்னுஞ் செத்திலேன் அந்தோ
விழித்திருந் துள்ளக் கருத்தினை இழந்தேன்
ஐயனே அரசே அருட்பெருங் கடலே
அத்தனே அயன் மாற்கறி யொண்ணாச்
செய்யமே னியனே செய்வகை அறியேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

## அச்சோப் பதிகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்கு
அறியும்வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்சோவே.

செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன் தான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சிதம்பர வரலாற்றுச் சுருக்கம்

ஈழமணித் திருநாட்டின் யாழ்ப்பாண மேற்பகுதியில் பொலிவும் சிறப்பும் பெற்று விளங்கும் காரைநகர் சிவன் கோவில் என்னும் ஈழத்துச் சிதம்பர வரலாறு மிகப் புராதனமானதும் அற்புதமானது மாகும். இலங்கையிலுள்ள பழம் பெரும் ஆலயங்களுள் காரைநகர் திண்ணபுரத்தில் எழுந்தருளியுள்ள சுந்தரேசுவரப் பெருமான் (சிவன் கோவில்) ஆலயமும் ஒன்றாகும். இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்களைப் பெற்றது. தென்னகத்தில் தல மகிமை பெற்று விளங்கும் சிதம்பரத்தில் நிகழும் கிரியைமரபுகளைப் பின்பற்றும் பாரம்பரிய சிறப்புப் பெற்றது. இவ்வகையால் இத்தலத்திற்கு ஈழத்துச் சிதம்பரம் என்னும் சிறப்புப்பெயர் உரியதாயிற்று.

இற்றைக்கு ஏறக்குறைய 250 ஆண்டுகட்கு முன்னர் காரைநகர் திண்ணபுரம் என்னுமிடத்தில் ஆண்டி என்னும் இறைபத்தி மிகுந்த அன்பர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அங்குள்ள அரசமரத் தடியில் வைரவசூலத்தை வைத்துப் பூசை வழிபாடு செய்து வந்தார். அதற்கருகே ஒரு கேணியைத் தோண்டியபோது பூரணை புட்கலை சமேத ஐயனார் விக்கிரகம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. மிகப் பழமை வாய்ந்த இவ்விக்கிரகத்தை அங்கு நிறுவிப் பூசைசெய்து வந்தார். ஆண்டி தோண்டியபடியால் ஆண்டிகேணி என்றும், எடுக்கப்பட்ட விக்கிரகம் ஆண்டிகேணி ஐயனார் எனவும் வழங்கப்பட்டன. ஆண்டி பலவருடங்களாப் பூசைசெய்து வருகையில் களபூமியைச் சேர்ந்த அம்பலவி முருகர் என்னும் சிவபக்தரும் இன்னும் பல சைவ அன்பர்களும் சேர்ந்து வழிபாடு செய்து வரலாயினர்.

ஏறக்குறைய 170 வருடங்களுக்கு முன்னர் அம்பலவி முருகர் அரசமரத்திற்கு வடக்குப்பக்கமாக ஐயனார்கோவில் அமைத்துக் கும்பாபிடேகம் செய்வித்தார். காலக்கிரமத்தில் அவரா லும் அவரது சந்ததியினராலும் ஊர்ப்பெருமக்களாலும் மற்றும் பல சைவஅன்பர்களதும் உதவியுடன் சுந்தரேஸ்வரப்பெருமான் சௌந்தராம்பிகை, விநாயகர், சுப்பிரமணியர், நடராசப் பெருமான், சோமாஸ்கந்தர் முதலான மூர்த்திகளுக்கும் ஆலயங்கள் அமைக்கப் பெற்றன.

அம்பலவி முருகர் ஐயனார் எழுந்தருளுவதற்கு வேண்டிய உற்சவமூர்த்தி ஒன்றை வார்த்துத் தரும்படி சிற்பாசிரியர் ஒருவரை வேண்டிக்கொண்டார். அவரும் ஐயனார் திருவுருவை வார்த்து அன்பரிடம் காட்டியபோது அத்திருவுருவின் அழகில் மனதைப்பறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து அதனை உடனே பெற்றுச்செல்ல முருகர் விரும்பினார். ஆயினும் அதனைச் செப்பஞ் செய்துதருவதாகக் கூறிச் சிற்பியும் செப்பஞ் செய்யத் தொடங்கினார். அப்போது திருவுருவத்தி னின்றும் உதிரம் வடியத் தொடங்கியது. அதைக் கண்ட சிற்பாசிரியர் ஆச்சரியமடைந்து திகைத்து நின்றார். இவ்வற்புதத்தை ஈழத்துச் சிதம்பர புராணம் (செய்யுள் 50) பின்வருமாறு கூறுகின்றது.

அப்பனே வேண்டா மின்னே யவ்வுருத் தருக வென்னச்
சிற்பனுஞ் சிறிது போழ்திற் றிருத்தியான் தருவனென்றே
ஒப்பமுஞ் செய்தானாகக் குருதிநீ ரொழுகக் கண்டு
செப்புவா யடங்கக் கைகள் சிரமுறத் திகைத்து நின்றான்.

சிற்பி ஒப்பஞ் செய்யாமலே திருவுருவத்தை முருகரிடம் கொடுத்தான். ஐயனார் திருவுருவம் ஒப்பஞ் செய்யாமலே கும்பாபிஷேகம் செய்யப்பெற்று பூசிக்கப்பட்டு வருகிறது.

அம்பலவி முருகர் ஐயனார் கோவிலுக்கு வடக்குப் பக்கமாகச் சிவன் கோவிலைக் கட்டுவித்தார். பின்னர் சிவலிங்கத்தை பெறுவது பற்றி நினைத்து ஏங்குவாராயினார். அக்காலத்தில் சிவலிங்கம் இலங்கையிற் கிடைக்காது. செய்யக் கூடிய சிற்பாசிரியரும் அங்கு இருக்கவில்லை. ஒருநாள் இறைவன் பெரியாரது கனவிலே தோன்றி சிதம்பரத்திலுள்ள ஒரு சிற்பியிடம் பதினாறு(16) சிவலிங் கங்கள் உண்டு என்றும் அவற்றுள் தம்மால் அடையாளம் காண்பிக்கப்படும் சிவலிங்கத்தை பெற்று வரும்படியும் கூறி மறைந்தார். முருகர் இறைவன் திருவருளை வியந்து அவ்வாறே சிதம்பரம் சென்று சிற்பாசிரியரின் இல்லத்தை அடைந்து தம்கருத்தைத் தெரிவித்தார்.

அவர் தன்னிடமுள்ள பதினாறு (16) சிவலிங்கங்களையுங் காட்டினார். முருகர் அவற்றினை ஆராய்ந்தபோது ஏழாவது சிவலிங்கத்திலிருந்து காற்று உயர்ந்து எழுவதைக்கண்டு, அதுவே இறைவனின் அருட்குறிப்பென்பதை உணர்ந்து அதனையே பெற்றுக்கொண்டார். பின்னர் சிலகாலம் சிதம்பரத்தில் தங்கியிருந்து அம்பிகை, விநாயகர், சுப்பிரமணியர், சண்டேசுவரர், நந்தி, பலிபீடம் முதலான திருவுருவங்களையும் செய்வித்துக் கொண்டு காரைநகர் திண்ணபுரம் திரும்பி, தாம் அமைத்த சிவாலயத்தில் அம்மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்வித்தார். சிவலிங்கப் பெருமானதும் அம்பிகையினதும் தோற்றத்தின் அழகைக் கண்ட சிவாச்சாரியர்களும் சைவ அன்பர்களும் பெரியாரும் சிவலிங்கத்திற்குச் **சுந்தரேஸ்வரர்** என்றும் அம்பிகைக்குச் **சௌந்தராம்பிகை** என்றும் திருநாமமிட்டு வாழ்த்தி வணங்கினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சோமாஸ்கந்த மூர்த்தி

அம்பலவிமுருகர் சோமாஸ்கந்த மூர்த்தியின் திருவுருவத்தைச் செய்விப்பதற்காகத் தன்மகன் சண்முகத்தாருடன் சிதம்பரம் சென்றார். அங்கே சிற்பிகளுடன் தம்விருப்பத்தைத் தெரிவித்து சோமாஸ்கந்தமூர்த்தியை வார்ப்பித்தபோது இருமுறை கருச்சிதைந்து விட்டது. முருகர் பெரிதும் மனம்நொந்து திருவருளைவேண்டித் தம்காதுகளில் அணிந்திருந்த பொற்கடுக்கன்களைக் கழற்றிச் சிற்பியிடம் கொடுத்து அவற்றையுஞ் சேர்த்து உருக்கி வார்க்கும்படி வேண்டினார். இம்முறை கரு நன்றாக அமைந்து திருவுருவம் அழகாக அமைந்ததைச் சிற்பிவாயிலாக அறிந்த முருகருடைய ஆன்மா, அத்திருவுருவிலே கலந்ததுபோல மறைந்தது. இவற்றினை ஈழத்துச்சிதம்பர புராணம் (செய்யுள்கள் 18, 20)பின்வருமாறு கூறுகின்றது.

அப்பொழுது திருவருளா லொருகுறிப்பு மனத்தருட்டச்
செப்பியதஞ் செல்வமெலாஞ் சிவன்பணிக்கே சேர்த்தவரும்
ஒப்பறுபொற் கடுக்கனிரண் டுதவாமற் சுமக்கின்ற
தப்பறுதந் நிலையுணர்ந்து தாமவற்றைக் கழற்றிப்பின்

இவைதம்மைச் சுமந்தபழிக் கினியென்ன கழுவாயென்
றவைதம்மைச் சிற்பரிட மளித்தார்மற் றதனோடு
நவைதீரக் கலந்துருக்கி நன்மையென வார்த்தெழுந்தார்
தவமுடையார் கருமத்தின் றத்துவத்தை யாரறிவார்

மகன் சண்முகத்தார் தந்தையாரின் ஈமக் கடன்களைச் சிதம்பரத்தில் முறைப்படி செய்து சிலநாட்களின் பின்னர் சோமாஸ்கந்தமூர்த்தியை திண்ணபுரத்திற்குக் கொண்டு வந்து கும்பாபிஷேகம் செய்வித்தார்.

### நடராசர் திருவுருவம்

ஈழத்துச் சிதம்பரத்திலுள்ள நடராசர்திருவுருவம் மிக அற்புதமானது. வியாக்கிரபாத முனிவரும் பதஞ்சலி முனிவரும் திருவடியின் இருமருங்கிலும் தொழுதேத்த ஐம்பத்தியொரு சுடர்களைக் கொண்ட வட்டத்திருவாசியுடன் கூடியது. இவ்வாறான அமைப்பும் அழகும் பொருந்திய திருவுருவம் இந்தியாவிற்றானும் இரண்டொரு தலங்களில் மாத்திரமே உண்டெனக் கோயில் வரலாற்றிலும் மூர்த்தி சிற்பக்கலை நுணுக்கங்களில் நிபுணத்துவமுள்ள திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டமான் அவர்கள் 1963 ஆம் ஆண்டு ஈழத்துச் சிதம்பரத்தை தரிசிக்க வந்தபோது கூறியதுடன் கலைமகளில் ஈழத்துச் சிதம்பரத்தின் சிவகாமி அம்பாள் சமேதராக அமைந்திருக்கும் நடராசமூர்த்தம் பற்றிக்கட்டுரை எழுதியிருந்தார். இங்குள்ள நடராசமூர்த்தியின் திருவுருவமானது ஈழத்துச்சிதம்பரத திலேயே சோழபுரத்து குருசாமி ஆசாரியாரால் வார்க்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மார்கழித் திருவாதிரைத் திருவிழா

ஈழத்துச் சிதம்பரத்தில் வருடத்தில் மூன்றுமுறை பங்குனி, ஆடி, மார்கழி ஆகிய மாதங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இவற்றுள் மார்கழியில் வரும் திருவாதிரை விழாவே மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.

மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நாள் நடராசப் பெருமானுக்குச் சிறப்பானவிழா நாளாதலில் அத்திருநாளில் நடேசப் பெருமானுக்கு விசேட அபிடேகஞ் செய்வர். அந்த ஆதிரைநாளை ஒட்டி முன்பாகவுள்ள ஒன்பது நாள்களும் விழாச் செய்து வழிபடுவர். இதைத் திருவாதிரைத் திருவிழா என்பர்.

திருவாதிரைத் திருவிழா நடக்கின்ற பத்துத் தினங்களிலும் சுந்தரேஸ்வரப் பெருமானுக்கும் சௌந்தராம்பிகைக்கும் விசேட அபிடேகம், பூசை நடைபெற்றபின் மணிவாசகப் பெருமானுக்கு பூசை நிகழும். அதன்பின் மணிவாசகப்பெருமானை கூத்தபிரான் சந்நிதிக்கு எழுந்தருளச்செய்து திருவெம்பாவையை ஓதுவர். அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபத்தில் சந்திரசேகரப் பெருமான் அம்பாள் சகிதம் பிள்ளையார், சுப்பிரமணியர் ஆகியோருடன் இரண்டாம் வீதிஉலா வந்து அடியார்களுக்குக் காட்சி கொடுப்பார்கள். மாலைப் பூசையின் பின் திருவெம்பாவை ஓதப்படும் ஒன்பதாம் நாளாகிய தேர்த் திருவிழாவன்று நடராசப்பெருமான் செவ்வந்திப் பூக்களினாலும் திருவாபரணங்களினாலும் அலங்கரிக்கப்பட்டு ஆனந்தத் தாண்டவம் ஆடிக்கொண்டு சிவகாமசுந்தரி அம்பாளோடு உள்வீதியில் பக்தர்கள் புடைசூழ மேளவாத்தியங்கள் ஒலிக்க, திருமுறைகள் ஓதுவோர் பஜனை செய்துவரும் காட்சியைக் கண்டு மெய்யடியார்கள் உளமுருகி வழிபடுவார்கள். பின்னர் நடசாசப் பெருமானும் ஏனைய மூர்த்திகளும் மூன்றாம் வீதியிற் பவனி வரும் காட்சி பத்திமயமான அற்புத ஆனந்தக் காட்சியாகும். முதலாம் தேரில் பிள்ளையாரும் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியரும், இரண்டாம் தேரில் பூரணை புட்கலை சமேத ஐயனாரும் மூன்றாம் தேரில் நடராசப் பெருமானும், நான்காம் தேரில் சிவகாமசுந்தரி அம்பாளும், ஐந்தாம் தேரில் மாணிக்கவாசகப் பெருமானும் எழுந்தருளி வீதிவலம் வருவார்கள்.

தேர்த் திருவிழாவன்று இரவு பதினெட்டு நாளிகையின் மேல் இருபத்துநான்கு நாளிகை வரையில் ஆதிரை அபிடேகமும் அதன்மேல் சூரியோதயத்திற்குமுன் ஆருத்தரா தரிசனமும் நிகழும். மிகவும் சிறப்பாக நடைபெறும் அபிடேகத்தையும் அதன்பின் நடைபெறும் ஆருத்திரா தரிசனத்தையும் கண்டு களிக்க ஈழத்தின் நாற்றி சைகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மெய்யன்பர்கள் ஈழத்துச் சிதம்பரத்திற்கு வருவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாதிரை நாளாகிய பத்தாம்நாள் மாலை நடேசப் பெருமானுக்கும் சிவகாமசுந்தரி அம்பாளுக்கும் விசேட பூசை நடைபெற்று இரண்டாம் வீதியில் திருஉலா வருதல், திருவூடல், உள்வீதியில் தீர்த்தம் ஆகியன நிகழும். திருவாதிரைத் திருவிழா நாளாகிய பத்துநாட்களும் பக்தர்கள் தங்கள் நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதற்காக விரதமிருந்து, அங்கப்பிரதட்சணம் செய்வார்கள், காவடி எடுப்பார்கள். இக்காலத்தில் காரைநகர் மணிவாசக சபையினரால் ஈழத்துச் சிதம்பரத்தில் மணிவாசகவிழா மிகச்சிறப்பாக நடாத்தப்படும். இவ்விழாவில் ஈழத்தையும் தமிழ்நாட்டையும் சேர்ந்த அறிஞர்கள் பலர் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார்கள். மணிவாசகர் மடாலயத்திலும் சிவாச்சிரமத்திலும் அன்னதானம் நடைபெறும்.

பலகோடி ரூபாய் செலவில் பல ஆண்டுகளாக கருங்கல் சிற்ப வேலைப்பாடுகள் செய்யப்பெற்று அமைந்த இரு ராஜகோபுரங்கள் ஐயனாருக்கும் சிவனுக்கும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அவற்றின் வர்ண வேலைகளும் முடிவுற்று, கும்பாபிடேகம் செய்ய நாட்களும் நிச்சயிக்கப்பட்டிருக்கையில் ஈழப்போரின் தாக்கத்தினால் யாவும் தடையுற்றிருக்கின்றன.

## சிவன்கோயிலின் தனிப்பெருமை

அப்பெரியார் நினைவென்கோ வவருள்ளச்
சிலையென்கொ வருளினாடல்
செப்பு திருப்பதியென்கோ சிறந்தடியா
ரானந்தத் தேனை யள்ளி
முப்பொழுது முணவைத்த நிதியென்கோ
கதியென்கோ மூதூர்த் தில்லை
அப்பனம்மை யெழுந்தருளி யருணிதியை
பாலிக்க வமைந்த கோயில்

## கூத்தப்பிரான் வணக்கம்

ஆர்த் தெழுந் துலகோ டுயிராடிட
நீத்தத் தண்மதி நீள்சடை யாடிட
எத்துந் திண்ண புரத்துநின் றாடிடுங்
கூத்தன் சேவடி கும்பிடு வாமரோ

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"வான் கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே."

மாணிக்கவாசகப் பெருமான் திருத்தாள் போற்றி
ஈழத்துச்சிதம்பர நடராசப் பெருமான் உடனுறை சிவகாம
சுந்தரி அம்பாள் நம் அனைவருக்கும் அருள் நல்க
இறைஞ்சி வணங்குகின்றோம்.

**பொன்னம்பலம் குழந்தைவேலு**

**கே. கே. எலெக்ரோனிக்ஸ்**

**K. K. ELECTRONICS**

**TEL: (416) 429-8417**
**(416) 209-0514**



உ

திருவெம்பாவை - திருவாதிரை விழா காண்போர் வாழி!
பூசனை செய்வோர் வாழி! பூசை காண் அடியார் வாழி!
திண்ணபுரத்து நின்றாடிடும் ஈழத்துச் சிதம்பரேசன்
திருத்தாள் வாழிய வாழியவே!

**டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்**

**ஸ்காபரோ பல் வைத்திய நிலையம்**

**SCARBOROUGH DENTAL OFFICE**
2155 Lawrence Avenue E, Suite 10
Scarborough, Ontario
**TEL: (416) 750-9969**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு

கே. கே. எலெக்ரோனிக்ஸ்

ஸ்காபுரோ பல் வைத்தியநிலையம்

தொகுப்பு

தி. விஸ்வலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org